**செய்தி வெளியீடு எண் : 1184** **நாள் : 15.07.2022**

<u>மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு</u>

## <u>கர்ப்பிணி தாய்மார்கள் PICME 2.0 இணையதளத்தில் தங்கள் கர்ப்பத்தை சுயமாக பதிவு செய்து RCH எண் பெறும் வசதி</u>

பேறுகால மற்றும் குழந்தை தொடர் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இணையதளம் கர்ப்பிணிகளை பின் தொடர்ந்து அவர்களின் கர்ப்பகால விவரங்களை பதிவு செய்தல் மற்றும் மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு விகிதத்தை குறைப்பதற்கான நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிக்மி இணையதளம் ஏப்ரல் 2008-ல் தேசிய தகவலியல் மையத்தால் உருவாக்கப்பட்டது. ஆண்டுதோறும் 11 லட்சம் தாய்மார்களின் தகவல்கள் பிக்மி இணையதளத்தில் பதிவு செய்யப்படுகிறது.

தாய்மார்களுக்கு RCH எண் என்ற ஒரு தனிப்பட்ட அடையாள எண் வழங்கப்பட்டு கர்ப்பப்பதிவு முதல் குழந்தை பிறந்து 5 ஆண்டுகள் வரை தாய்சேய் நல சேவை விவரங்கள் பிக்மியில் பதிவு செய்யப்படுகிறது.

தமிழக அரசால் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு தாய்மார்களுக்கு RCH எண் அவசியமாக்கப்பட்டுள்ளது. தற்போது கிராம சுகாதார செவிலியர் மூலம் கர்ப்ப பதிவு செய்து RCH எண் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தாய்மார்கள் RCH எண் பெறுவதை மேலும் எளிதாக்கும் பொருட்டு PICME 2.0 இணையதளத்தில் https://picme.tn.gov.in/picme_public மூலம் கர்ப்பிணி தாய்மார்கள் தாமே சுய பதிவு (Self Registration) செய்து RCH எண் (RCH Number) பெறும் வசதி மாண்புமிகு மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களால் 27.05.2022 (வெள்ளிக்கிழமை) அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

RCH எண் சுய பதிவு வசதி துவக்கி வைக்கப்பட்ட நாள் 27.05.2022 முதல் 30.06.2022 வரை 230 கர்ப்பிணி தாய்மார்கள் இவ்விணையதள வசதியை பயன்படுத்தி தங்கள் கர்ப்பத்தினை சுய பதிவு செய்து தங்களுக்கான தனிப்பட்ட அடையாள எண் (RCH எண்) பெற்றுள்ளனர்.

அனைத்து கர்ப்பிணி தாய்மார்களும் எவ்வித சிரமமுமின்றி தங்களுக்கான தனிப்பட்ட அடையாள எண்ணை PICME 2.0 இணையதளத்தில் உள்ள RCH சுய பதிவு வசதியை பயன்படுத்தி பெற்று கொள்ளுமாறு தமிழக அரசால் கேட்டு கொள்ளப்படுகிறது.

மேலும் RCH சுய பதிவு பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்கு https://youtu.be/8MukXt7IVsQ என்ற வலை ஒளி இணைப்பினை (You tube link) பயன்படுத்திக் கொள்ளுமாறு பயனாளிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in